# 5

# கோடைக் காலக் கொடுமை

## அலட்சியம் காட்டும் பெற்றோர்களின் நவீன கண்டுபிடிப்பு சம்மர் கேம்ப்



குழந்தைகள்தான் தேசத்தின் எதிர்காலம் என்று தலைவர்கள் / நட்சத்திரங்கள் / ஆசிரியர்கள் / பெற்றோர்கள் / இன்னும் யாரானாலும் வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் சொல்லத் தயங்குவதேயில்லை. ஆனால் குழந்தைகளை வகைவகையாக சித்திரவதை செய்யும் முறைகளை கண்டுபிடித்துக் கொண்டிருப்பதும் நாமேதான்.

ஏற்கனவே நம்முடைய பாட திட்டம், பயிற்று மொழி, கணிசமான ஆசிரியர்களின் மனோபாவம் எல்லாம் சேர்ந்து நம் குழந்தைகளுக்குப் பள்ளியை சித்திரவதைக் கூடமாக்கி வைத்திருக்கின்றன. பத்து மாத சித்திரவதை போதாதென்று மீதி இரண்டு மாதங்களுக்கும் புதிய கொடூரத்தை அண்மைக்காலமாகக் கண்டு பிடித்து உருவாக்கி அதையும் காசு பண்ணும் கலையாக வளர்த்திருக்கிறது நமது சமூகத்தின் நடுத்தர வர்க்கம்.

கோடை வெயிலுடன் கூட சேர்ந்து நம் குழந்தைகளை வதைப்பது சம்மர் கேம்ப்.

அறுபதுகளில் நான் ஐந்தாம் வகுப்பு முடித்து விட்டு ஆறாவது வகுப்புக்குச் சென்றபோது ஒரே ஒரு முறை ஒரு சம்மர் கேம்ப் நடத்தப்பட்டது. அது ஐந்து வரை தமிழ் மீடியத்தில் படித்து விட்டு ஆறாவதில் ஆங்கில மீடியத்தில் சேரும் சிறுவர்களுக்கு விடுமுறை நாளில் அவர்களுடைய ஆங்கில அறிவை மேம்படுத்துவதற்கானது. (இன்று நேர் மாறான தமிழ் சம்மர் கேம்ப் தேவைப் படலாம்). மற்றபடி கோடை விடுமுறைகளில் பள்ளி நாட்களில் நானும் என்

நண்பர்களும் அவரவர் வீட்டு கூடங்களிலேயே போர்வைகளை திரையாகக் கட்டி, அட்டைக் கத்திகளுடன் வீரபாண்டிய கட்ட பொம்மன் நாடகங்களை எல்லா வீட்டுப் பெரியவர்களையும் ஆடியன்சாக அமர வைத்து நடத்திய நினைவுகளே இனிமையாக இன்றும் இருக்கின்றன.

இப்போது எதற்கெடுத்தாலும் சம்மர் கேம்புகள்தான். கிரிக்கெட், ஓவியம், நீச்சல், குதிரையேற்றம், கோலம் போடுவது, நடனம், நாடகம், இசை, கேக் செய்வது, ரொட்டி சுடுவது, அடுப்பு பற்றவைப்பது என்று சம்மர் கேம்ப்பின் தீம்களுக்கு கற்பனையே எல்லை. பெரும்பாலான கேம்ப்புகள் விடுமுறை காலத்தில் வீட்டில் குழந்தைகளை வைத்து மேய்ப்பது எப்படி என்று புரியாத, தெரியாத இளம், நடுவயது பெற்றோர்களுக்கு உதவி செய்யும் டே கேர் சென்ட்டர்கள்தான். கூட்டுக் குடும்பம் உடைந்து விட்டது; வீட்டில் குழந்தைகளை கவனிக்க ஆள் இல்லை; இரு பெற்றோரும் வேலைக்கு செல்வோர் என்று காரணங்கள் சொல்லப்படுகின்றன.

இவையெல்லாம் அசல் பிரச்சினைகள்தான். ஆனால், இன்னும் ஆழமாக யோசித்துப் பார்த்தால், வேறு சில முக்கியமான பிரச்சினைகள் இதற்குப் பின்னணியில் இருப்பதை உணரலாம். கோடை விடுமுறைக்காக முன்கூட்டி திட்டமிட்டு அப்பாவோ அம்மாவோ மாறி மாறி வீட்டில் குழந்தைகளை கவனித்துக் கொள்ளலாம் என்ற அணுகுமுறை கிடையாது. பத்து வயதானவுடனே சிறுவர்களுக்கு தங்கள் வேலையை தாங்களே கவனித்துக் கொள்ளும் ஆற்றல்களை ஏற்படுத்தி அவர்களை அவ்வாறு சுதந்திரமாக இருக்க, உணரச் செய்யும் மனோபாவம் பெற்றோருக்கு இல்லை. குழந்தைகளை தீம் பார்க்குகளுக்கு கூட்டிச் செல்வது, ஐஸ்கிரீம் வாங்கித் தருவது, செல்லம் கொஞ்சுவது என்பதற்கு மேல் அவர்களுடன் ஆக்கப்பூர்வமான நேரம் செலவிடும் பார்வை பெரும்பாலான பெற்றோருக்கு இல்லை. பல சமயங்களில் டி.வியைத் திட்டிக் கொண்டே அதை பேபி சிட்டராக பயன்படுத்துகிறார்கள். டி.வி பார்க்கும்போது கூட, இராக் மீது குண்டு மழைக் காட்சியை குழந்தைகள் ரசித்துப் பார்க்கையில், அப்படியே, இராக் பற்றி, பாபிலோன் தொங்கும் தோட்டங்கள் பற்றி, சுமேரிய நாகரிகம் பற்றி குழந்தைகளின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் கலந்துரையாடுவதற்கான முயற்சி பல பெற்றோர்களுக்குக் கிடையாது. அதற்கான அறிவும் அவர்களுக்கே இல்லை என்பதும் ஒரு பிரச்சினை.

வருடம் முழுவதும் இசை, நடனம், ஓவியம், விளையாட்டுக்கெல்லாம் நேரம் இல்லாததால், கோடை விடுமுறையில் கேம்ப்புகள் மூலம் அவற்றை குழந்தைகள் பெறச் செய்துவிடலாம் என்று பெற்றோர்கள் நினைக்கிறார்கள். ஏன் வருடம் முழுவதும் இதற்கெல்லாம் நேரம் இல்லாத நிலை என்பதைப்

பற்றி யோசிப்பதே இல்லை. காலை எழுந்தவுடன் படிப்பு; பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு மாலை முழுதும் விளையாட்டு என்ற பாரதி வரிகள் பரீட்சைக்கும் பரிசுப்போட்டிக்கும் மட்டுமே பயன்படுகின்றன. புத்தகப்படிப்பு, மனப்பாடம், தேர்வு என்பது மட்டுமாக முழு நேரக் கல்வி இருப்பது தவறு. அது மாற்றப்பட்டு தினசரி பள்ளி நேரத்திலேயே, இசை, ஓவியம், நடனம், விளையாட்டு எல்லாம், எல்லா குழந்தைகளுக்கும் தரப்பட வேண்டும் என்பது பற்றி பெற்றோருக்கோ/ஆசிரியர்களுக்கோ/ கல்வி நிர்வாகங்களுக்கோ அக்கறையில்லை.

வீட்டுக்குள்ளே கேரம், சீட்டுக்கட்டு, டிரேட் போன்ற உள் விளையாட்டுக்களில் பகலிலும், மாலையில் சடுகுடு,கோலி, கிளித்தட்டு, காற்றாடி, கால்பந்து, கிரிக்கெட் என்று கள விளையாட்டுக்களில் குழந்தைகளுடன் சேர்ந்து பெரியவர்கள் ஈடுபட வேண்டும். இவற்றை செய்யத் தவறும் பெற்றோர்கள், கோடை வதை முகாம்களுக்கு குழந்தைகளை விரட்டும் பெற்றோர்கள், நிச்சயம் குற்றவாளிகள். பின்னாளில் இவர்களை முதியோர் இல்லங்களுக்குத் துரத்துவதில் எந்தக் குற்றமும் இல்லை.

**ஏப்ரல் 30, 2003**

# 14

## பேட் பாய்ஸ்

ரசனையை உயர்த்த வேண்டியவர்கள் செய்யும் காரியமா இது




வெற்றியின் ரகசியம் என்ன ? நீண்ட காலமாக மனித குலத்தை வாட்டும் கேள்விக்கு மெகா சினிமா இயக்குநர் ஷங்கரும் சர்வ பத்திரிகை எழுத்தாளர் சுஜாதாவும் நமக்கு ஒரு சினிமா மூலம் பதில் சொல்லியிருக்கிறார்கள்.

வழக்கமாக வெற்றியின் ரகசியம் உழைப்பு, கடும் உழைப்பு என்று வெற்றி பெற்ற முதலாளிகள் சொல்வார்கள். அப்படியானால் கடுமையாக உழைக்கிற எல்லாரும் ஏன் வெற்றியடைவதில்லை? கூடவே அதிர்ஷ்டமும் வேண்டும் என்பார்கள்.

சுஜாதாவும் ஷங்கரும் வித்யாசமான பதிலை பாய்ஸ் படத்தில் சொல்லுகிறார்கள். நேர்மைதான் வெற்றியின் ரகசியம். எவ்வளவு உன்னதமான கருத்து? படத்தில் இந்த நேர்மை எப்படியெல்லாம் வெளிப்படுகிறது என்று பார்க்கலாம்.

கேர்ள்ஸ் ஆசைகளை அடக்கிக்கொள்ள என்ன செய்கிறார்கள், மார்பகங்களை பெரிதாக்கவும் கெட்டிப்படுத்தவும் என்னென்ன பயிற்சிகள் செய்கிறார்கள் என்று பாய்ஸ் நேரடியாக கேர்ள்சிடம் நேர்மையாக கேட்டுத் தெரிந்து கொள்கிறார்கள்.

பெண் உறவுக்கு ஏங்கும் பாய்ஸ் என்ன செய்ய வேண்டும் ?

சுஜாதா (70)வும் ஷங்கரும் (30) நேரடியாகவே வகுப்பு எடுக்கிறார்கள். பஸ்சில் எப்படி இடிக்கலாம், உரசலாம், ஜவுளி-நகைக் கடைகளில் சுரணையற்ற மாமிகளை எப்படி தடவலாம் என்று காட்சி ரூபத்தில் கற்றுக் கொடுத்திருப்பது நிச்சயம் அவர்கள் வீட்டுப் பெண்களுக்கும் பயன்படும். இனிமேல் வீட்டை விட்டு வெளியிலேயே வரமா ட்டார்கள்.

கதாநாயக பாய் காதலில் ஜெயிப்பதற்காக அண்ணா சாலையில் நிர்வாண ஓட்டம் ஓடுகிறான். ஆனால் காதலில் எதிரிகளான பெற்றோர்களின் சித்ரவதையினால், பாய்ஸூம் கேர்ளும் வீட்டை விட்டு நடுத்தெருவில் குடிகார அங்கிளின் (தமிழில் சொன்னால் தப்பாகிவிடும்) உதவியுடன் வாழ்க்கையில் வெற்றி அடையப் போராடுகிறார்கள். போராடிக் கண்டுபிடித்த உண்மைதான் நேர்மையே வெற்றியின் ரகசியம். இது நமக்கு எளிதில் புரிவதற்காக, மார்பகங்கள் குலுங்கக் குலுங்க பெண்கள் ஆடிப் பாடிச் சொல்கிறார்கள்.

நேர்மை என்பதை நாம் தப்பாகப் புரிந்துகொண்டு விடக் கூடாது என்ற கவலையும் படைப்பாளிகளுக்கு இருக்கிறது. அய்யப்பன் சீசனில் பாய்ஸ் பணத்துக்காக அய்யப்பன் கேசட் போடுவது நேர்மை. எம்.டி.வி விருதுக்காக ஆபாசமாக ஆடுவது நேர்மை, காதலுக்காக நிர்வாணமாக தெருவில் ஓடுவது நேர்மை, ஆனால், ஊழல் அரசியல்வாதிகளை எதிர்த்து தெரு நாடகம் போடும் தீவிரவாதிகளுக்குப் பணத்துக்காகக் கூடப் பாட்டு போட்டுக் கொடுப்பது தப்பு. அதனால் பொடாவில் கைது செய்யும் ஆபத்து ஏற்படும். எனவே சமத்தான பாய்ஸூம் கேர்ள்சும் பஸ்சில் இடிப்பது, கடையில் உரசுவது, வீட்டில் யாரும் இல்லாதபோது பாலியல் தொழிலாளியை அழைத்துவருவது போன்ற நேர்மையான விஷயங்களை மட்டும் செய்யலாம்.

சென்னை தணிக்கை அலுவலகத்தில் டிரெயிலர் படத்துக்கே ஏராளமான வெட்டுகள் விழுந்ததும், மொத்தப் படத்தை தணிக்கைக்கு ஹைதராபாதுக்கு கொண்டு போய்விட்டார்கள். இந்த நேர்மைதான் வெற்றியின் ரகசியம்!

சென்னை நகர் போலீஸ் நேர்மையாக நடந்து கொள்ள முடிவு செய்தால், உடனடியாக படைப்பாளிகளை பல்வேறு இ.பி.கோ. செக்ஷன்களின் கீழ் கைது செய்ய வேண்டும்.

பெண்களைக் கேவலமாக, கீழ்த்தரமாக சித்திரிப்பதில் தொடங்கி, பெண் சீண்டலை ஊக்குவிப்பது, இளம் மனங்களை வக்கிரப்படுத்துவது வரை பலவிதமான குற்றங்கள் பாய்ஸ் படத்தில் செய்யப் பட்டிருக்கின்றன. பூங்காவிலும் பீச்சிலும் இருக்கும் அப்பாவிகளிடம் வீரம் காட்டும் போலீசுக்கு படைப்பாளிகள் வீட்டு வாசலுக்குப் போக தைரியம் ஏது?

ஆபாசமான வசனங்களும், காட்சிகளும் நிரம்பிய இந்தப் படத்தை ஏன் இவர்கள் உருவாக்க வேண்டும்? பணத்துக்காகவா? இருவரும் ஏற்கனவே லட்சாதிபதிகள், புகழ்? இன்னுமா? இளைஞர்களின் அசலான பிரச்சினைகளில் ஒன்றான பாலியல் ஒடுக்குமுறையை சமூகத்துடன் பகிர விரும்பிய அக்கறையா? படத்தில் அந்த அக்கறைக்கு துளியும் இடம் இருக்க வில்லையே.

என்னைப் பொறுத்த மட்டில் அசல் பிரச்சினை வேறு.

ஒரே ஒரு முறை நம் வீட்டில் ஒரு பத்து ரூபாயைத் திருடிவிட்டால், அந்த வேலைக்காரரின் நிலை என்ன ? நிரந்தரமாக குற்றவாளிப் பட்டம். நம் வட்டாரத்திலேயே வேறு யார் வீட்டிலும் அவரை வேலைக்கு வைத்துக் கொள்ள முடியாத நிலையை வேகமாக ஏற்படுத்திவிடுவோம்.

ஆனால் இவ்வளவு கேவலமான படைப்பை தெரிந்தே உருவாக்கித் தருபவர்கள் சமூகத்தில் எந்தப் புறக்கணிப்புக்கும் இழிவுக்கும் ஆளாவதில்லை. தொடர்ந்து சுஜாதாவை தீவிர இலக்கிய இதழ்கள் முதல் வெகுஜன இதழ்கள் வரை விமர்சனம் இன்றிக் கொண்டாடிக் கொண்டிருக்கும். ஷங்கருக்கு அடுத்த வாய்ப்பு உண்டு. வேலைக்காரிக்குக் கிடையாது. குறைந்தபட்சம் ஷங்கரும் சுஜாதாவும் ஒரு பொது மன்னிப்பைக் கோரி தினத்தந்தியில் பாய்ஸ் விளம்பரம் சைசில் வெளியிட வேண்டுமென்று எழுதும் நேர்மை கூட நமது ஊடகங்களில் பலருக்கு இல்லை.

காரணம் நமது சமூகம் எப்போதுமே புத்திசாலித்தனத்தையும் சாமர்த்தியத்தையும் கொண்டாடுகிறது. அவற்றைப் பயன்படுத்தி பணமும் புகழும் சேர்த்துக் கொள்பவர்களை ஆராதிக்கிறது. ஆனால் புத்திசாலிகள் நேர்மையானவர்களா என்பதைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. அதனால்தான் நேர்மையின் பெயராலேயே ஒரு கேவலமான படைப்பை தைரியமாக சந்தைக்குக் கொண்டுவர முடிந்திருக்கிறது.

**செப்டம்பர் 17, 2003**

# 31

## குழந்தைகள் ஆன்மீக வியாபாரத்தில் ஈடுபடுத்தப்படுவது தண்டனைக்குரிய குற்றம் இல்லையா?

# செழிக்கிறது சாமியார் தொழில்



**ஏப்ரல் 28, 2004**

**இந்தியாடுடே**

இந்தியாவில் லைசன்ஸ் இல்லாமல் நடக்கும் தொழில்கள் இரண்டு - ஒன்று விபசாரம். இன்னொன்று ஆன்மீகம்.

விபசாரத் தொழிலுக்கு லைசன்ஸ் முறையைக் கொண்டு வருவது பற்றி புதிய அரசு பரிசீலித்து வருவதாக மத்திய 'மனித வள மேம்பாட்டு' துறை துணை அமைச்சர் காந்திசிங் அறிவித்திருக்கிறார். இந்த அறிவிப்பு பல சர்ச்சைகளைக் கிளப்பும் என்றாலும், பாலியல் தொழிலாளர்கள் தற்போது கிரிமினல்களாக நடத்தப்படுவதை நிறுத்தவும் அவர்களுடைய உடல்நலம், எதிர்காலம் இவற்றுக்கு உத்தரவாதம் கருதியும் இதை வரவேற்கலாம்.

ஆன்மீகத்துக்கும் இந்த தேசத்தில் லைசன்ஸ் முறை இருந்தால் நல்லது என்று தோன்றுகிறது. காரணம் விபசாரத்தை விட அதிகம் பேரை பாதிக்கக்கூடியதாக அதுவே இருக்கிறது.

சில சமயங்களில் சாமியார்களைக் குழி தோண்டிப் புதைக்கிறார்கள். பல சமயங்களில் தங்களுக்குத் தாங்களே கண்ணுக்குத் தெரியாத குழி தோண்டிப் புதைத்துக் கொள்கிறார்கள். ஐந்தாண்டுக்கொரு முறை ஒரு சாமியார் அம்பலப்பட்டாலும், புதுப் புது சாமியார்கள் உருவாகிக் கொண்டேதான் இருக்கிறார்கள்.

இந்த வாரம் கவனத்துக்குரியவர் ஒரு குட்டிச் சாமியார். அவருக்கு இந்தப் பெயரைச் சூட்டியவர்கள் இன்னும் சில வாரங்களுக்கு இந்த விசித்திர சாமியாரின் பரபரப்பை விற்பனைக்கு பயன்படுத்தவிருக்கும்

நம்முடைய பத்திரிகைகள் தான்.

குட்டிச் சாமியார் விவகாரம் பல அடிப்படை கேள்விகளை எழுப்புகிறது. பதின்மூன்று வயதாகும் பரணீதரன் என்ற இந்த சிறுவனின் படிப்பை மூன்றாம் வகுப்புடன் முடித்துவிட்டு, அவனை வேத பாடசாலையில் சேர்த்து ஆன்மிகம் நோக்கி திருப்பிவிட்டதே அவனுடைய பெற்றோர்கள் தானாம். கர்நாடகம் சென்று 'துறவி'யாகிவிட்ட சிறுவன் இனி பெற்றோருடன் சேர மறுக்கிறான். சிறுவன் 'ஆன்மீக சொற்பொழிவு' நடத்த வந்த இடத்தில் அவனை பெற்றோர் கடத்த முயன்றதாக குற்றச்சாட்டு. விசாரித்த போலீஸ் அதிகாரிகளிடம் சிறுவன் பெற்றோருடன் திரும்பிச் செல்ல மறுப்பு; அவனை வேறு சிலர் பயன்படுத்தி பணம் சம்பாதிக்க முயற்சிப்பதாக பெற்றோர் புகார்.

சட்டப்படி ஒரு 13 வயது சிறுவன் தான் என்ன செய்யவேண்டுமென்பதை தானாக தீர்மானிக்க முடியாது. பெற்றோரோ கார்டியனோதான் முடிவு செய்ய வேண்டும். அவர்கள் தன்னை துன்புறுத்துவதாக சிறுவன் தெரிவித்தால், அவர்களுடன் இருக்க விருப்பமில்லை என்று கூறினால், அப்போது சிறுவனைக் காப்பகத்துக்குத்தான் போலீஸ் அனுப்ப வேண்டும்.

ஆனால் இந்த சிறுவன் காவி அணிந்திருப்பதால், போலீசுக்குத் தடுமாற்றம். சட்டப்படி காப்பகத்துக்கு அனுப்பாமல், பெற்றோருடனும் அனுப்பாமல், 'சுவாமிகள்' விருப்பப்படி செல்ல அனுப்பிவிட்டார்கள். கூட துப்பாக்கியுடன் காவலுக்கு ஏற்பாடு வேறு.

பத்திரிகைச் செய்திகளின்படி குட்டிச் சாமியார் தானே தனியே ஆசிரமம் அமைத்து ஆன்மிக சொற்பொழிவுகள் நடத்தி வருகிறார். இது எப்படி சாத்தியம்? ஒரு 13 வயது சிறுவனுக்கு அதற்குள் தனக்கான ஸ்தாபன அமைப்பை எல்லாம் ஏற்படுத்திக் கொள்ள முடியுமா ? எனவே இதற்குப் பின்னால் சில பெரியவர்கள் இருக்கிறார்கள் என்பதும், அந்தப் பெரியவர்களுக்குள் யார் வசம் சிறுவன் இருப்பது என்ற பிரச்சினையே கடத்தல், காவல் நிலையம் வரை 'ஆன்மீகத்தை' அழைத்து வந்திருக்கிறது என்பதும் தெளிவாகத் தெரிகிறது.

குட்டிச் சாமியாரின் ஆன்மிக சொற்பொழிவால் கவரப்பட்டு தொழிலதிபர்கள், வக்கீல்கள், டாக்டர்கள் என்று பக்தர்கள் அதிகரித்துவருவதாக இன்னொரு செய்தி சொல்கிறது. ஒரு 13 வயது சிறுவன் எப்படிப்பட்ட ஆன்மிக வாதியாக இருக்க முடியும்? வேத நூல்கள், பக்தி புராணங்கள் எல்லாவற்றையும் படித்து விட்டு திரும்பச் சொல்வது ஆன்மிகமாகுமா? அப்படியானால் 1330 திருக்குறளையும் கரதலப்பாடமாகப் படித்துவிட்டு அடி முதல் நுனி வரை எந்த வரிசையில் கேட்டாலும் சொல்லும் ஆற்றல் உடைய பத்துப் பன்னிரெண்டு சிறுவர் சிறுமியர் தமிழ்நாட்டில் உண்டே. அவர்களுக்கு பக்தர்களாக தொழிலதிபர்கள் வந்து குவியாததன்

மர்மம் என்ன?

எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு 13 வயது சிறுவனை அவனது பெற்றோரோ அல்லது வேறு யாரோ மூளைச் சலவை செய்து ஆன்மிகவாதியாக ஆக்கிக் காட்டுவது குழந்தை மீதான சித்திரவதை குற்றம் இல்லையா? குழந்தைத் தொழிலாளர் முறை தடுப்புச் சட்டத்தின் கீழ் ஒரு குழந்தை கல் சுமப்பதும், தீக்குச்சி சுற்றுவதும், கார் துடைப்பதும் தடை செய்யப்பட வேண்டுமென்றால், சாமியார் தொழிலில் ஆன்மிக வியாபாரத்தில் ஈடுபடுத்துவதும் தடைக்குரிய குற்றம் இல்லையா?

எனக்கு 13 வயதிலேயே இந்த உலகத்துக்கு வழிகாட்டக்கூடிய ஆன்மிக அறிவு வந்துவிட்டது என்று ஒரு சிறுவன் சொல்வதை ஏற்கலாம் என்றால், இன்னொரு சிறுவன் தனக்கு 12 வயதிலேயே குடும்பத் தலைவனாவதற்கான பக்குவம் வந்துவிட்டது என்று சொல்லி தனக்கு திருமணம் செய்து வைக்கச் சொன்னால், செய்து வைத்து விடுவோமா என்ன ?

பக்தியின் பெயரால் ஒரு சேலத்துத் தமிழ்க் குழந்தை சிறு பருவம் முதலே குறிப்பிட்ட மன நிலையில் வளர்க்கப்பட்டு சாமியாராக்கப்படுவதை இந்த சமூகம் கொண்டாடும் என்றால், தேசபக்தியின் பெயரால், ஒரு ஈழத்துத் தமிழ்க் குழந்தை சிறு பருவம் முதலே குறிப்பிட்ட மன நிலையில் வளர்க்கப்பட்டு துப்பாக்கி ஏந்திய சிப்பாயாவதை மட்டும் எப்படி கண்டிக்க இயலும்? எப்படிப்பட்ட மூளைச் சலவைக்கும் குழந்தைகள் உட்படுத்தப்படுவதை கறாராகக் கண்டிக்கும் சமூகமே நேர்மையான சமூகமாக இருக்க முடியும்.

குழந்தைகள் நம் மூலம் இந்த உலகத்துக்கு வருகிறார்கள். அதனாலேயே அவர்கள் நம் விருப்பப்படி பயன்படுத்தக்கூடிய நம்முடைய உடமைகளாகி விடமாட்டார்கள். நம் பொறுப்பில் இருக்கும் எதிர்கால மனிதர்கள் அவர்கள். இந்த உலக வாழ்க்கையின் எல்லா தன்மைகளையும் அறிந்து கொள்ளவும், புரிந்துகொள்ளவும் தேவையான ஆற்றல்களைக் கற்பித்து வளர்ந்தபின் தமது முடிவுகளை தாமே எடுக்க கூடியவர்களாக வளர்ப்பதே நம் பொறுப்பு.

**ஜூன் 2, 2004**

# 33

சமூகத்தில் பெண்களுக்கான இடம் எது என்பதைப் பற்றி தவறான பாவனைகள் தொடர்வது ஆபத்து

# ஒப்பனைக்குப் பின்னால்...



சென்ற வாரம் சென்னைப் புற நகர்க் கல்லூரி மாணவர்களுடன் ஒரு பயிற்சி வகுப்பில் நான் பங்கெடுத்துக் கொண்டிருந்த அன்று காலை ஆங்கில தினசரியொன்றில் ஒரு செய்தி வெளியாயிற்று. தமிழ் திரைப்பட உலகில் பெண்கள் மேக்கப் கலைஞர்களாக பணி புரிய சினிமா தொழிலாளர் யூனியன் அனுமதிக்காது என்பதே அந்தச் செய்தி. பெண்கள் மேக்கப் கலைஞரானால், ஆண்களுக்கு வேலை போய்விடும் என்று கூறியது யூனியன்.

சினிமாக்காரர்களுக்கு காமிரா முன்னால் ஆபாசமாக ஆடிப்பாடி நடித்து வசூல் நடத்தப் பெண்கள் வேண்டும். ஆனால் காமிராவுக்குப் பின்னால் தொழில் நுட்பப் பிரிவில் பெண்கள் கூடாதாம். இந்த அராஜகத்தைக் கண்டித்து இரண்டே இரண்டு நடிகைகள் குரல் மட்டுமே இது வரை ஒலித்திருக்கிறது.

ஆண்-பெண் ஏற்றத்தாழ்வு, உறவு நிலை, வேலைப் பகிர்வு இதைப் பற்றியெல்லாம் நமது சமூகத்திலிருக்கும் மனோபாவம் சிறு வயதிலேயே உருவாகிவிடுகிறது. கடந்த தலைமுறைகளின் கருத்திலிருந்து அடுத்த தலைமுறைகள் மாறும் வாய்ப்பிருக்கிறதா ? இந்த கேள்விக்கான பதிலை ஒவ்வொரு முறை ஏதேனும் ஒரு கல்லூரிக்கோ, பள்ளிக்கோ நிகழ்ச்சிகளுக்கும் வகுப்புகளுக்கும் செல்லும் போதெல்லாம் தேடுகிறேன்.

## ஒரு ஆண் எப்படி இருக்க வேண்டும்?
## ஒரு பெண் எப்படி இருக்க வேண்டும்?

இந்தக் கேள்விகளுக்கு ஆண்கள் ஒரு விதமாகவும் பெண்கள் இன்னொரு விதமாகவும் பதில் கூறக்கூடும் என்று அவசியமில்லை. இருவருக்கும் சமூகம் பல காலமாக ஏற்படுத்தி வைத்திருக்கும் மன நிலையினால் ஒரே மாதிரி பதில்களை இருவரிடமும் எதிர்பார்க்கலாம்.

ப்ளஸ் டூ முடித்துவிட்டு கல்லூரிக்குள் நுழைந்திருக்கும் 120 மாணவர்களைக் கல்லூரி வாழ்க்கைக்கு தயார் செய்யும் பயிற்சி வகுப்பில், அன்று நான் கொடுத்த கேள்வித்தாளில் மேற்கண்ட கேள்விகளும் இருந்தன.

பெண் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கான பதில்களில் அதிகம் பயன்படுத்தப்பட்ட சொற்கள் இவை : அடக்கம், ஒழுக்கம், அனைவருக்கும் மதிப்பு, பொறுமை, அழகு, பூப்போல மென்மை, தாய் – தந்தை விருப்பப்படி நடத்தல், கோபப்படாமல் இருத்தல், அறிவு, பணிவு, இரக்க குணம், நிதானம், ஹோம்லி, அமைதி, குடும்பப் பெருமையைப் பாதுகாத்தல், எல்லாரையும் அனுசரித்தல், கனிவு, பாசம், தாழ்ந்து போகும் மனம்.

ஆண் எப்படி இருக்க வேண்டும் என்ற பதில்களில் இத்தனை வகை சொற்கள் இல்லை. அதிகம் இடம் பெற்றவை : தைரியம், துணிச்சல், வீரம், நாட்டில் தீயதைக் தட்டிக் கேட்கும் துணிவு, பொறுப்பு.

மாணவன்கள், மாணவிகள் இருபாலாருமே அதிகம் இத்தகைய சொற்களைத்தான் எழுதியிருந்தார்கள். மாணவிகள் பதில்களில் மட்டும் ஆண் எப்படி இருக்க வேண்டும் என்பதில் நல்ல உள்ளம் உடையவனாக, தீய பழக்கங்கள் இல்லாதவனாக என்ற எதிர்பார்ப்புகள் சேர்ந்திருந்தன. ஒரு மாணவி ஆண் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம் என்று எழுதியிருந்தாள். இன்னொரு பெண் தன் வாழ்க்கை லட்சியமே சிறந்த பெண்மணியாக இருப்பது என தெரிவித்திருந்தாள். ஒரு மாணவன் பெண், பெண்ணாக இருக்க வேண்டும் என்றெழுதியிருந்தான். விதிவிலக்காக ஒரு சிலரே பெண்ணுக்கு தன்னம்பிக்கை, சுய சார்பு வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்கள்.

ஆண் பற்றியும் பெண் பற்றியும் இத்தகைய கருத்துக்களை, தீர்மானங்களை, எதிர்பார்ப்புகளை இந்த 17 வயது இளம் மனங்களில் இதற்குள்ளாக உருவாக்கியது யார் ? குடும்பம், பள்ளிக்கூடம் , மீடியா மூன்றும்தான் என்பதில் எந்த சந்தேகமும் வேண்டாம்.

குடும்பத்தில் அப்பாவும் அம்மாவும் தாத்தா பாட்டிகளும் சகோதரர்களும்தான் ஒவ்வொரு சிறுவனுக்கும் சிறுமிக்கும் முன்மாதிரிகளாக இருக்கிறார்கள். அன்பும் அதிகாரமும் கலந்த இந்த சூழல்தான்

ஆண்- பெண் உறவின் ஆரம்பப் பாடங்களை சொல்லித் தருகிறது. பெண் என்றால் அடக்கமாக இருக்க வேண்டும் என்று எழுதிய நிறைய மாணவன்கள் வீட்டில் தங்களுக்குப் பிடித்த நபர் என்று அம்மாவைக் குறிப்பிட்டிருந்தார்கள்.

அடுத்துப் பள்ளிக்கூடம், இங்கு அன்பை விட அதிகாரமே கூடுதலாகிறது. அறிவை விட மதிப்பெண்ணே முக்கியம் பெறுகிறது. பிறகு மீடியா, தங்களுக்குப் பிடித்தமான டி.வி. நிகழ்ச்சிகளாக மாணவர்கள் குறிப்பிட்டவை மெட்டி ஒலி, அண்ணாமலை, அண்ணி, சித்தி, தடயம், கோலங்கள், சொர்க்கம். ஒரே ஒரு மாணவிதான் கேள்விகள் ஆயிரம் என்ற விவாத நிகழ்ச்சியைக் குறிப்பிட்டிருந்தாள்.

தினசரி பத்திரிகை படிக்கும் பழக்கம் பலருக்கு இல்லை. படிப்பவர்களில் பெரும்பாலோர் படிக்கும் தமிழ் தினசரிகள் தினத்தந்தியும் தினமலரும் மட்டுமே. ஒருவர் கூட தினமணியைக் குறிப்பிடவில்லை.

இந்த டீன்- ஏஜ் இளைஞர்கள் பலரும் தச்சர், ஃபிட்டர், கூலித் தொழிலாளி, எலெக்ட்ரீஷியன், கட்டடத் தொழிலாளர், கூரியர் தபால்காரர் என்று திரட்டப்படாத தொழிலாளர் குடும்பக் குழந்தைகள். மாதம் ஆயிரம் ரூபாய் கல்விக் கட்டணமானாலும் ‘தரமான’ தனியார் கல்லூரிப் படிப்பு தங்கள் குழந்தைகளுக்கு வேண்டும் என்று ஆசைப்படும் பெற்றோர்கள், இத்தனை ஆண்டுகளாக தங்கள் குழந்தைகளின் தலைக்குள்ளே தாங்கள் எதையெல்லாம் தெரிந்தும் தெரியாமலும் திணித்து வருகிறோம் என்ற பிரக்ஞையோடு இருப்பதில்லை.

கல்லூரிக்குள் அடி எடுத்து வைக்கையில் இவர்களில் பெரும்பாலோருக்கு த்ரிஷா, சதா, ஜோதிகா, சூர்யா, மாதவன், விக்ரம் பற்றி ஏராளமான மெய்யும் பொய்யுமான தகவல்கள் தலை முழுக்க நிரப்பப்பட்டிருக்கின்றன. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி, (ஆண்- பெண் உடற்கூறு வேறுபாட்டுக்கு காரணமான) எஸ்ட்ரோஜன் ஹார்மோன் போன்றவை பற்றி அவர்கள் பதினேழாண்டு வீட்டு, பள்ளி வாழ்க்கையில் கேள்விப்பட்டது மிக மிகக் குறைவு.

கல்பனா சாவ்லா பெயரை அமெரிக்கத் தெருவுக்குச் சூட்டியதை பள்ளிக்கூட காலை பிரேயரில் செய்தி அறிவிக்கிறார்கள். திரைப்பட ஒப்பனைக் கலைஞராவதற்குப் பெண்களுக்கு அனுமதியில்லை போன்ற செய்திகளையும் பள்ளி அசெம்பிளியில் வாசிக்கத் தொடங்கும் காலம் எப்போது ? இப்படிப்பட்ட செய்திகள் இளைஞர்களிடையே பேசப்படாத மௌனம்தான், இன்று பாலச்சந்தர் முதல் பாலா வரை ‘படைப்பாளி’களின் துறை சார்ந்த மௌனமாக, வாழ்க்கை நெடுக நீளுகிறது.

**ஜூலை 28, 2004**

# 40

# மேலும் ரகசியங்கள் வெளிவரட்டும்

**முதல்வர் ஜெயலலிதா செய்தது சரியே. மேலும் பல ரகசியங்களை வெளியிட்டால் தேவலாம்.**



அரசு ரகசியத்தை ஜெயலலிதா வெளியிட்டுவிட்டார். அதனால் உடனே அவர் பதவியிலிருந்து விலக வேண்டும் என்ற கூக்குரல்களை தி.மு.க, காங்கிரஸ் கூட்டணிக் கட்சிகள் எழுப்பியுள்ளன.

இந்தக் கோரிக்கை அபத்தமானது. அரசு ரகசியத்தை வெளியிட்டதற்காக ஜெயலலிதாவைப் பாராட்டவேண்டும். மேலும் மேலும் அரசு ரகசியங்களை அவர் வெளியிடவேண்டும் என்பதுதான் இப்போது எழுப்பவேண்டிய நியாயமான கோரிக்கை.

மத்திய உள்துறை அமைச்சரும் ஒரு மாநில முதலமைச்சரும் மாநிலத்துக்கு புதிய ஆளுநரை மத்திய அரசு நியமிக்க இருப்பது பற்றி உரையாடினார்கள். இருவருக்கும் கருத்து வேறுபாடுகள் இருந்தன. அதைப் பொருட்படுத்தாமல் மத்திய அரசு தான் விரும்புபவரை நியமிக்கிறது. அதற்கான அதிகாரம் தனக்கு உள்ளதாக மத்திய அரசு கருதுகிறது. இது பற்றிய சர்க்காரியா கமிஷன் பரிந்துரைகளை அது பொருட்படுத்தவில்லை. இவ்வளவுதான் விஷயம். இதுதான் உரையாடலின் சாராம்சம்.

அதை டேப் பண்ணியிருந்தாலும் சரி, நினைவிலிருந்து சொல்லியிருந்தாலும் சரி. இதையொட்டி விவாதிக்கவேண்டிய பிரச்சினைகள் என்ன ? டேப்பா ? மெமரியா? ஜெயலலிதா மெமரி மாத்திரை சாப்பிடுகிறாரா என்பவை அல்ல. ஜெயலலிதாவுக்கு அந்த அளவுக்கு நினைவாற்றல் இருக்க முடியும் என்பதில் எனக்கு

சந்தேகமில்லை.

திரைப்பட உலகில் பல நீண்ட வசனங்களை நினைவில் வைத்து பேசிய ஆற்றலும் பயிற்சியும் அவருக்கு உண்டு. சில விஷயங்களில் மட்டுமே செலக்டிவ் அம்னீஷியா உண்டு.

எனவே ஜெ- சிவராஜ் பாட்டீல் உரையாடலையொட்டி விவாதிக்கப்பட வேண்டியவை ஒரு மாநில ஆளுநரை அதன் முதலமைச்சரின் சம்மதத்துடன்தான் நியமிக்க வேண்டுமா, முதலில் இந்த ஆளுநர் பதவி என்பதே தேவைதானா என்ற மத்திய- மாநில உறவுகள் உரிமைகள் தொடர்பான விஷயங்கள் தான்.

ஜெயலலிதா வெளியிட்டிருக்கும் உரையாடல் தகவல்கள் அரசு ரகசியமாகக் கருதப்படவே தகுதியற்றவை. தவிர ஒவ்வொரு அரசும் இப்படி ரகசியம் என்ற போர்வையில் எல்லாவற்றையும் மக்களிடமிருந்து மறைப்பதே அடிப்படையில் தவறானது. அதைத்தன் கண்டிக்கவும் மாற்றவும் வேண்டும்.

அரசாங்கத்தின் டெண்டர்கள் ஆனாலும் சரி, சினிமா விருதுகளானாலும் சரி, நூலகத்துக்கு புத்தகங்கள் தேர்வு செய்வதானாலும் சரி, எல்லாவற்றிலுமே விண்ணப்பித்த கம்பெனிகள், அமைப்புகள், டெண்டர், புத்தக, திரைப்பட விவரங்கள், தேர்வானவற்றின் தகுதி அடிப்படை, தேர்வுக் குழுவினரின் பெயர்கள் எல்லாமே பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்.

ராணுவ ரகசியம், தேசப்பாதுகாப்பு என்ற பெயரில் ரகசியங்களாக வைக்கப்பட வேண்டியவற்றுக்குக் கூட ஒரு வரம்பும் நியாயமும் இருக்க வேண்டும். கல்பாக்கத்தில் அணுகுண்டு மூலப்பொருள் தயாராகிறது என்பதற்காக ஊழியர்களுக்கு ஏற்படும் கதிர் வீச்சு அளவை அவர்களுக்கே கூட தெரியாமல் வைத்திருப்பதெல்லாம் அரசு ரகசியமோ ராணுவ ரகசியமோ ஆகாது. ராணுவ மந்திரியாக இருந்தபோது ஜார்ஜ் பெர்ணாண்டஸின் உடைகளை அவிழ்த்து அமெரிக்காவில் சோதனை போட்டதை அவர் சொல்லாமல் வைத்திருந்ததெல்லாம் இந்த தேசத்தில் அரசு ரகசியமாகக் கருதப்படுவது கேவலமானது.

அரசு ரகசியத்தை அம்பலப்படுத்தி விட்டார் என்ற அடிப்படையில் ஜெயலலிதாவை பதவி விலகச் சொல்லும் கலைஞர் கருணாநிதியின் அரசியல் வரலாற்றில் முக்கியமான அத்தியாயம் - அரசு ரகசியத்தை தோண்டியெடுத்து அவர் அம்பலப்படுத்தியதுதான். அவருக்கும் இப்போது அதைப்பற்றி செலக்டிவ் அம்னீஷியா ஏற்பட்டுவிட்டது.

எம்.ஜி.ஆர் முதலமைச்சராக இருந்தபோது திருச்செந்தூர் கோவில் வளாகத்தில் கோயில் அதிகாரி சுப்பிரமணியப்பிள்ளை மர்மமான முறையில் இறந்து கிடந்தது பற்றி விசாரிக்க நீதிபதி பால் கமிஷனை நியமித்தார் எம்.ஜி.ஆர். ஆனால் கமிஷன் அறிக்கையில் பிள்ளை கொலை

செய்யப்பட்டிருப்பதாக சந்தேகம் எழுப்பப்பட்டதும் தன் அரசுக்கு பாதகமான அந்த அறிக்கையை வெளியிட மறுத்துவிட்டார். அந்த அறிக்கையை கருணாநிதி கைப்பற்றி பிரதிகளை மீடியாவில் வெளியிட்டார். அதற்காக அரசு ரகசியத்தை திருடியதாக அவர் மீது எம்ஜிஆர் வழக்கு தொடுத்தார். கருணாநிதியின் செயலாளரான சண்முகநாதன், அரசு அதிகாரி சதாசிவம் மீது வழக்குகள் தொடுக்கப்பட்டு அவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். 'உண்டியல் திருடன். பிடிபட்ட அவமானத்தில் தற்கொலை செய்து கொண்டான்' என்று இறந்த சுப்பிரமணியப் பிள்ளையைப் பற்றி அன்றைய அற நிலைய அமைச்சர்- இன்றைய கருணாநிதி ஆதரவாளர் ஆர்.எம்.வீரப்பனும் அ.இ.அ.தி.முகவினரும் விமர்சனம் செய்தபோது அமைச்சர்தான் வைர வேல் திருடன் என்று தி.மு.க பதில் விமர்சனம் செய்தது. மதுரையிலிருந்து திருச்செந்தூர் வரை நீதி கேட்டு நெடிய பயணமாக 120 கிலோமீட்டர் பாத யாத்திரை சென்றார் கருணாநிதி.

அத்தனைக்கும் அடிப்படை என்ன ? அரசு ரகசியம் என்று சொல்லி உண்மைகளை மக்களிடமிருந்து மறைக்கக் கூடாது என்பதுதான் அன்று கருணாநிதி எடுத்த நிலை. அதே அடிப்படையில் பார்த்தால் இன்றும் ஆளுநர் நியமனத்தில் மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையில் நடந்தது என்ன என்ற உண்மைகள் மக்களுக்கு தெரியவேண்டாமா ? அரசு ரகசியத்தைத் திருடி வெளிப்படுத்தினால் அது நியாயம். ஜெயலலிதா தன் அரசின் ரகசியத்தை தானே வெளிப்படுத்தினால் அது மட்டும் அநியாயம் என்பது அற்பமான அரசியல். கூட்டணி 'தர்ம'த்துக்காக இடதுசாரிகளும் ஜால்ரா கோஷ்டிகளாக இருப்பது அதை விட அற்பமானது.

ஒரு அரசின் செயல்பாட்டில் எந்த ஒளிவு மறைவும் இருக்கக்கூடாது. ரகசியம் என்ற பெயரில் எல்லாவற்றையும் மூடி மறைப்பதுதான் தொடர்ந்து அரசாங்கங்களை மக்களின் வேலையாளாக இல்லாமல் எஜமானாக மாற்றி வைத்திருக்கிறது.

எனவே ஜெயலலிதா தொடர்ந்து எல்லா ' ரகசிய'ங்களையும் வெளிப்படுத்த வேண்டும். அது அதிரடிப்படை நடவடிக்கையானாலும் சரி, ஏன் அடிக்கடி அமைச்சர்களை மாற்றுகிறார் என்பதானாலும் சரி.

**நவம்பர் 17, 2004**

# 47

**ஆண்–பெண் உறவுகளைப் புரிந்துகொள்ள வீட்டிலும் வகுப்பறையிலும் விவாதங்கள் தேவைப்படுகின்றன.**

# பயன் தந்த திருமணம்



பிரபலமானவர்களின் வாழ்க்கையை வேடிக்கை பார்ப்பதும் முடிந்தால் துருவிப் பார்ப்பதும் எல்லா சமூகங்களிலும் இயல்பாகி விட்டது. சிம்ரன் கருவுற்றிருக்கிறாரா இல்லையா என்பதைப் பற்றி அவரை படத்துக்கு ஒப்பந்தம் செய்தவர்கள் அறிந்துகொள்வதில் நியாயம் இருக்கலாம். திட்டமிட்டபடி படப்பிடிப்பு நடக்குமா நடக்காதா என்பதைப் பற்றிய கவலை அவர்களுடையது. ஆனால் சினிமா ரசிகன் இதைப் பற்றியெல்லாம் எதற்காக தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும்? பிரபலங்களின் வாழ்க்கை பற்றிய இந்த சோளப்பொரி (அல்லது வெறும் வாய்க்கான அவல்) தகவல்களால் ஒரு பயனும் இல்லையா? பெரும்பாலும் இல்லைதான். பணமும் புகழும் உடைய வி.ஐ.பிகள் வாழ்க்கை எந்த விதத்திலெல்லாம் நம்முடைய அலுப்பூட்டும் அன்றாட வாழ்க்கையிலிருந்து வேறுபட்டதாக இருக்கிறது என்று அறிந்துகொண்டு, நிலைமைக்கேற்ப ஒரு ஏக்கம் அல்லது பொறாமை அல்லது நிம்மதிப் பெருமூச்சு உதிர்க்கலாம்.

சில தருணங்களில் பிரபலங்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளிலிருந்து பயன் தரும் விவாதங்களும் பிறக்க முடியும் என்பதை அண்மையில் அனுபவித்தேன். நம் அசல் முகத்தை நாமே தரிசித்துக்கொள்ள உதவும் விவாதங்கள்.

பிரிட்டிஷ் இளவரசர் சார்லஸ் தன்னைவிட ஒரு வயது மூத்த நீண்ட நாள் காதலி கமீலாவை ஒரு வழியாக திருமணம் செய்துகொண்டு

விட்டார். ஒரு விவாகரத்தான பெண் மறுமணம் செய்வதை கிறிஸ்தவ மத குருமார்கள் அங்கீகரிக்க முடியாதென்பதால் சிவில் சட்டப்படி நடத்தப்பட்ட திருமணத்துக்கு கமீலாவின் முதல் கணவர் பார்க்கரும் வந்திருந்தார். திருமணத்துக்கு சாட்சிகளாக சார்லசின் முதல் மனைவி டயானாவுக்குப் பிறந்த மகன் வில்லியம்சும் கமீலாவின் முதல் கணவர் பார்க்கருக்குப் பிறந்த மகன் டாம் பார்க்கரும் கையெழுத்திட்டார்கள்.

மேற்கண்ட ஏழெட்டு வாக்கியங்களில் இளவரசர் சார்லசின் திருமணச் செய்தியை அடக்கிவிடலாம். ஆனால் இந்த வாக்கியங்களில் உள்ள ஒவ்வொரு தகவலும் பெரும் விவாதங்களுக்கான கேள்விகளை எழுப்பக்கூடியவை.

பெண்ணைவிட பையன் ஒரு வயது குறைவா? நீண்ட நாள் காதலி கமீலா என்றால் அப்புறம் ஏன் சார்லஸ் நடுவில் டயானாவையும் காதலிச்சு கல்யாணம் பண்ணிகிட்டார்? கமீலாவும் ஏன் நடுவுல இன்னொருத்தரை கல்யாணம் பண்ணிகிட்டா? அம்மாவோட ரெண்டாவது கல்யாணத்துக்கு பிள்ளையே போய் சாட்சிக் கையெழுத்து போடறது சரியா தப்பா?

இந்த ஒவ்வொரு கேள்வியும் நாம் கலாச்சாரம் என்று நம்பக் கூடியவற்றுக்கு எதிரானதாக சார்லஸ்-கமீலா வாழ்க்கையும் திருமணங்களும் இருப்பதால் எழுகின்றன. ஆண்-பெண் உறவு பற்றியும் திருமணம் பற்றியும் நாம் இங்கே சரி என்று நம்பக்கூடியவற்றுக்கு இவை இசைந்து வராததால் கேட்கப்படுகின்றன.

இருபதாண்டுகளுக்கு முன்பு இத்தகைய விவாதங்கள் தனிப்பட்ட தளங்களில் எழும் வாய்ப்பே மிகக் குறைவு. எழுந்தாலும் ஒட்டுமொத்தமாக நம்முடையது அல்லாததை எல்லாம் கீழானது என்று பழிப்பதும் நாம் நல்லவேளை இப்படியெல்லாம் கெட்டுப் போய்விடவில்லை என்று பெருமிதம் கொள்வதுமாக முடியும் வாய்ப்பே அதிகம்.

இப்போது அப்படி இல்லை. இப்போதும் இந்தியக் கலாச்சாரம், தமிழ்ப் பண்பாடு பற்றியெல்லாம் கொஞ்சம் புனித உணர்வும் நாலுபேர் பற்றிய லேசான அச்சமும் இருக்கத்தான் செய்கின்றன. என்றாலும் முன்பைவிட இப்போது ஆண்-பெண் உறவுகள் பற்றியும் திருமணம் பற்றியும் மனக் கட்டுப்பாடுகள் இல்லாமல் விவாதிப்பதற்கான சூழல் சற்றே ஆரோக்கியமானதாக வளர்ந்து வருகிறது.

இரண்டு காதலர்களும் வேறு ஒருவரை திருமணம் செய்த பிறகும் தங்கள் காதலைத் தொடர்ந்தது சரியா? அதற்காக பாவமன்னிப்பு கோரும் சடங்குக்கு சார்லஸ் தன்னை உட்படுத்திக் கொண்டது. சரியா? ஏன் டயானாவை திருமணம் (செய்யாமல் முன்பே கமீலாவை சார்லஸ் திருமணம் செய்யவில்லை? அரசர் பட்டம் முக்கியமா, காதல் முக்கியமா? இப்போது இரண்டையும் சார்லஸ் காப்பாற்றிக் கொண்டது சார்லசின் புத்திசாலித்தனமா? இப்படி பல கேள்விகள் விவாதத்தில் பேசப்பட்டன.

இந்த மாதிரியான விவாதங்கள் வீட்டிலும் வகுப்பறையிலும் மறுக்கப்பட்ட இளைஞர்கள் மனதில் டிவியும் சினிமாவும் அரசியலும் ஏராளமான கேள்விகளை எழுப்புகின்றன. பதில்களுக்கு அவர்கள் எங்கே போவார்கள்.

அண்மையில் ஸ்டூடன்ட் கவுன்சிலராக இருக்கும் ஒரு பள்ளி ஆசிரியை ஒரு உளவியல் பயிலரங்கில் சொன்னார், தன் பாய் ஃப்ரெண்டுடன் எந்த அளவுக்கு தான் பிசிகலான உறவு வைத்துக் கொள்ளலாம், லிமிட் என்ன என்று ஒரு மாணவி தன்னிடம் கேட்டதாகவும் அவளுக்கு என்ன பதில் சொல்வதென்று தனக்குத் தெரியவில்லை என்றும், நான் அவருக்கு சொன்னேன்; உறவின் சந்தோஷங்களை மட்டுமே அந்த இளம் மனங்களால் இப்போது நினைத்துப் பார்க்க முடியும், உறவில் இருக்கும் வலிகளும் என்ன என்று எடுத்துச் சொல்லுங்கள். அந்த வலிகளை சந்திக்கவும் கடக்கவும் உன்னால் முடியுமென்றால் உன் லிமிட்டை நீயே தீர்மானித்துக் கொள்ளலாம் என்று அந்தப் பெண்ணுக்குச் சொல்லுங்கள் என்று சொன்னேன்.

வலிகளும் சந்தோஷங்களும் கலந்தவைதான் ஆண்-பெண் உறவுகள். அதைப் புரிந்துகொள்ள வீட்டுக்குள்ளும் வகுப்பிலும் விவாதங்கள் தேவைப்படுகின்றன.

உறவின் வலிகளைக் கடந்து வந்த பிறகு திருமணம் செய்தார்கள் சார்லசும் கமீலாவும் என்பதுதான் அவர்கள் திருமணத்தின் சிறப்பு, அது ராஜ குடும்ப திருமணம் என்பது அல்ல.

**இந்தியா டுடே**

**ஏப்ரல் 27, 2005**